*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இங்கே பேசுகின்ற உறுப்பினர் பாம்பு கடித்து இறந்தவர் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்கப்படவில்லை; அதுபோல இன்னொரு விபத்தில் மாண்டவர் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்கப்படவில்லை என்று சொல்கிறார். அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அதைப் பற்றி முதலமைச்சருக்கோ அல்லது துணை முதலமைச்சருக்கோ இதுவரையிலே தகவல் தெரிவித்ததுண்டா? தகவல் தெரிவித்து, இல்லை என்று அவருக்கு நாங்கள் பதில் எழுதி இருக்கிறோமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சொ. கருப்பசாமி, பேசுங்கள்.

திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவரின்மூலமாக தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. மனுவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. உரிய நடவடிக்கை எடுக்கப்படாமல் 6 மாத காலமாக நிலுவையில் இருப்பதனை இந்த அவைக்குத் தெரியப்படுத்துகிறேன். 2007-2008 ஆம் ஆண்டு பழங்குடியினர் விடுதிகள் கட்ட 40 இலட்சம் ரூபாய் என்று அறிவிப்பு செய்து 3 வருடங்கள் ஆகின்றன. கடந்த ஆண்டு, ஒரு விடுதி, ரூபாய் 50 இலட்சம் என்ற மதிப்பில் சங்கரன்கோவில் உட்பட சில இடங்களில் விடுதிகள் விரைவில் கட்டப்படும் என்று சொன்ன அறிவிப்பு காற்றில் பறக்கிறது. தாட்கோவில் ஒப்பந்தக்காரர்கள் அனைவரும் SC, ST சமூகத்தைச் சார்ந்தவர்கள் மட்டும்தான். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் 155 கோடி ரூபாயில் 493 விடுதிகளைக் கட்டிய SC, ST ஒப்பந்தக்காரர்கள் மீது, 30 விடுதிகளைக் கட்ட மறுப்பதாகப் பழி சுமத்திய தி.மு.க. . . .

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சொ. கருப்பசாமி, உங்கள் தொகுதியில்தான் 6 பேர் தண்ணீரில் மூழ்கி இறந்தார்கள் அல்லவா? அவர்களுடைய ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு இலட்சம் ரூபாய் முதல்வர் அவர்கள் இப்போதுதான் கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. சொ. கருப்பசாமி: ஏழைக் குடும்பத்திற்கு இரண்டு, இரண்டு இலட்சம் ரூபாய் கூடுதலாக உதவித் தொகையை உயர்த்திக் கொடுங்கள். பாவம் ஏழை மக்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்வதுமாதிரி, நம்முடைய உறுப்பினர், விமானத்தில் இருந்து முன்னாள் அமைச்சர் அருணாச்சலம் அவர்களை, உங்களுடைய தலைவி அம்மா அவர்கள் கீழே இறக்கிவிட்டார் என்றா சொன்னார்கள்? அப்படிச் சொல்லவில்லை. உங்கள் அம்மா பெயரைச் சொல்லவில்லை. “ஒரு அரிஜன தோழன் நான் ஏறுகிற விமானத்தில் ஏறக்கூடாது என்று விமானத்தில் இருந்து இறக்கினார்” என்று சொன்னார்கள். அதெல்லாம் சொல்லக்கூடாது என்றால் என்ன? நான் கேட்கிறேன், உங்கள் தலைவியினுடைய பெயரைச் சொல்லாமலேயே ஒருவர் தான், ஏறுகிற விமானத்தில் ஒரு அரிஜன தோழன் பயணம் செய்யக்கூடாது என்று இறக்கிவிட்ட கதையை இந்த நாடு அறியும் என்று சொல்கிறார்கள். அது தவறா? உங்களுடைய அந்த உறுப்பினர் பேசினாரே, அதைவிட இது மென்மையாக இல்லையா? அது ரொம்ப வன்மையாக இருந்ததே. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பெயரை அவர்கள் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்: அதைப்போல மராத்வாடா பல்கலைக்கழகத்திற்கு, அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பெயர் சூட்டப்பட வேண்டும் என்று மகாராஷ்டிரா மாநிலத்து மக்கள் போராடியபோதும் கிடைக்காத உரிமையை, இங்கே தமிழகத்திலே இருந்து தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் இலட்சோப இலட்சம் தொண்டர்கள்மூலமாக கையெழுத்திட்டு அட்டையை தந்தி அனுப்பச் செய்த காரணத்தால் மராத்வாடா பல்கலைக்கழகத்திற்கு அண்ணல் அம்பேத்கர் பெயர் சூட்டப்பட்ட பெருமை வாய்ந்த தலைவர், தமிழனத் தலைவர் கலைஞர் அவர்கள்.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் சம்பந்தி என்று சொல்லிக்கொள்வதிலே நாங்கள் பெருமையடைகிறோம்; தலைநிமிர்ந்து நிற்கிறோம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட, பழங்குடியின மக்கள், அடித்தட்டு மக்கள், இவர்களைப் பற்றிய விவாதம் நடைபெறும்போது,

ஆளுங்கட்சி செய்தவற்றைப் பற்றிக் குறிப்பிட்டு - "இவை போதாது; இன்னும் செய்ய வேண்டும்" என்று சொல்கின்ற நிலைமையிலே எதிர்க்கட்சியும் - அல்லது 'செய்தவை தவறு; அவை திருத்தப்பட வேண்டும்' என்று சொல்லக்கூடிய நிலையிலே எதிர்க்கட்சி விளங்கி - அதற்கு நிதானமான முறையில், அமைதியான முறையில் ஆளுங்கட்சி சார்பில் விளக்கமளிப்பதுதான், அந்தச் சமுதாயத்தைச் சார்ந்த அனைவருக்கும் நாம் செய்கின்ற சேவையாகும். அதை விட்டுவிட்டு, "ஆதி திராவிடர் மானியம் விவாதிக்கப்படும்போது, "அமளி; துமளி" என்று நாளைய தினம் பத்திரிகைகளில் செய்தி வருவது - அந்த மக்கள் பார்த்து மகிழ்ச்சியடையக்கூடிய செய்தியாக இருக்காது. எவ்வளவோ துன்ப நிலைகளை ஏற்றுக் கொண்டு, சமுதாயத்திலே உழன்று கொண்டிருக்கின்ற ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட அடித்தட்டு மக்கள் - கூன் விழுந்தவர்கள் நிமிர வேண்டுமென்பதற்காக எடுக்கின்ற முயற்சி - ஆளுங்கட்சியின் முயற்சியாகவும், எதிர்க்கட்சியின் முயற்சியாகவும், இரண்டும் இணைந்த முயற்சியாகவும் இருக்க வேண்டுமேயல்லாமல், இதிலே ஒருவருக்கொருவர் போட்டிப் போட்டுக் கொண்டு, அவர்களுக்காகப் பணியாற்ற வேண்டுமேயல்லாமல், எதிர்க்கட்சியை இந்த நேரத்திலே தாக்கியாக வேண்டும் என்று ஆளுங்கட்சியோ அல்லது ஆளுங்கட்சியை எப்படியும் இந்த நேரத்திலே தாக்கியாக வேண்டும் என்று எதிர்க்கட்சியோ நினைப்பது - அதற்கு இரு தரப்பிலே உள்ள தலைவர்களும் - நானும் என்னைச் சேர்த்துச் சொல்கிறேன் - இடமளிப்பது, அந்த மக்களுக்குச் செய்கின்ற உதவியாக இருக்காது. ஆகவே, அந்த மக்கள் நம்மைப் பார்த்து நகையாடாமல் இருப்பதற்கு, அமைதியான முறையிலே இந்த மானியத்தை நீங்கள் விவாதித்து, நிறைவேற்றித் தரவேண்டும் என்று இரு தரப்பிலே உள்ள உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன? அம்மா என்று சொன்னார்களா? (குறுக்கீடுகள்)

திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்: ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் அம்மா பெயரைச் சொல்லியிருந்தால் அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும். உட்காருங்கள். (குறுக்கீடு)

முற்பகல் 11-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: இங்கே பெயர் சொல்லியிருந்தால், அந்தப் பெயர் நீக்கப்படுவது சரியானதேயாகும். *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுதான் சொல்லியாயிற்றே? *(குறுக்கீடு)* எதிர்க்கட்சித் தலைவருடைய பெயரைக் குறிப்பிட்டிருந்தால் அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும்.

திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்: ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கின்ற ஆதி திராவிட மாணவ, மாணவிகளுக்கு . . . *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பெயரையும் சொல்லக்கூடாது, அம்மா என்றும் சொல்லக்கூடாது என்று சொல்கிறீர்கள். என்னதான் சொல்லவேண்டுமென்று நினைக்கிறீர்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர், பேசுங்கள்.

திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்: ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கின்ற ஏழை, தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியர் நற்பெயர் கொண்ட பள்ளிகளிலே சேர்ந்து படிக்கின்ற வசதியற்ற காரணத்தினால், ஒன்றியத்திற்கு ஒரு மாணவ, மாணவியர் என்ற வகையிலே தேர்ந்தெடுத்து, அவர்களுக்குத் தனி சிறப்புப் பயிற்சி கொடுத்து, ஆறாம் வகுப்பு முதல் ஒரு சிறந்த நற்பெயர் கொண்ட, உண்டு, உறைவிடப் பள்ளியில் சேர்த்து அவர்களுக்காக இந்த அரசு செலவிடுகிறது என்று நான் பெருமையோடு கூறிக்கொண்டு, மாவட்டவாரியாக பத்தாம் வகுப்பு வரை படிக்கின்றவர்களிலே, அதிக மதிப்பெண்களைப் பெற்றவர்களில் பத்து பேரையும் அவர்களுக்கும் இப்படிப் பதினொன்றாம் வகுப்பில் நற்பெயர் கொண்ட பள்ளிகளிலே சேர்ந்து படிப்பதற்கு தமிழினத் தலைவர் கலைஞர், முதல்வர் அவர்களுடைய அரசு இதற்காக நிதி ஒதுக்கி, இந்த தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற வழிவகை செய்திருக்கிறார்கள். அவர்கள் கல்வித் துறையிலே உயர்ந்தால்தான் சமுதாயத்திலே அவர்களுக்கு உயர்வு கிடைக்கும் என்ற வகையிலே செய்திருக்கின்ற தலைவர் கலைஞர் முதல்வர் அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.